# Educationalist Research Journal

(The BI - Annual Research Journal)

# கல்வியியலாளன் ஆய்விதழ்

## Chief Editor

Mr. P. Rajeswaran

Vol.5, October, 2016

ISSN 1800 - 1378

Educational Publication Centre

Jaffna, Sri Lanka.

# யா/ அச்செழு சைவப்பிரகாசா வித்தியாலயத்தில் மாணவர் இடைவிலகல்

நிருசா, ச.1, நித்திலவர்ணன், ஆ. 2

**ஆய்வுச்சுருக்கம்**

ஒரு நாட்டின் அல்லது ஒரு தனி மனிதனின் வளர்ச்சிக்குக் கல்வியறிவு அவசியமானது. பிள்ளைகளுக்குக் கல்வியை வழங்குவதில் பாடசாலைகள் பிரதான இடத்தினை வகிக்கின்றன. பாடசாலைகள் தமது இலக்கினை அடையவேண்டுமாயின் பாடசாலைகளில் பிள்ளைகளின் இடைவிலகலைக் குறைத்து பாடசாலைக்கு மாணவர்களின் வரவினை அதிகரித்தல் அவசியமானதாகும். அந்த வகையில் யா/ அச்செழு சைவப்பிரகாசா வித்தியாலயத்தில் மாணவர் இடைவிலகலைக் குறைக்கும் அல்லது தடுக்கும் முகமாக அதற்கான காரணங்களைக் கண்டறியும் நோக்குடன் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது ஒரு கள ஆய்வாகும். கோப்பாய்க் கோட்டத்தில் பின்தங்கிய கிராமமான அச்செழுக் கிராமத்தில் அமைந்துள்ள இப்பாடசாலையில் ஆய்வுக்குடித்தொகையாக இடைவிலகிய மாணவர் பதினைந்து பேரும், ஆசிரியர்கள் பதினைந்து பேரும், பெற்றோர் பதினைந்து பேரும் ஆய்வுக்குடித்தொகையாக எடுக்கப்பட்டுள்ளது. இவர்களிடம் வினாக்கொத்துக்கள் வழங்கியும், நேர்காணல் மூலமும், உரையாடல் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டதுடன், அவதானிப்புகள் ஊடாகப் பெற்ற தரவுகள் மூலம் "SWOT" ஆய்வும் மேற்கொள்ளப்பட்டு இப்பாடசாலையின் பலம், பலவீனம், வாய்ப்பு, அச்சுறுத்தல் என்பவற்றை இனங்கண்டு அதனூடாக மாணவர் இடைவிலகலைக் குறைப்பதற்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் அட்டவணைகள், சலாகைவரைபு, வட்டவரைபு மற்றும் புள்ளிவிபரப்பகுப்பாய்வு முறையான கை- வர்க்கப் பொருண்மைச்சோதனை மூலமும் தரவுப்பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவற்றினூடாக மாணவர் இடைவிலகலானது மாணவர்சார், பாடசாலைசார், குடும்பம்சார், சமூகம்சார் காரணிகளால் ஏற்படுத்தப்படுகிறது என்பதையும், முக்கியமாக குடும்பவறுமை, பொருளாதாரக்கஷ்ரம், ஒற்றைநிலைப்பெற்றோர் போன்ற காரணங்களாலும் ஏற்படுத்தப்படுகிறது என்ற முடிவையும் பெற்றுக்கொள்ள முடிந்தது.

**முக்கிய பதங்கள்:** யா/ அச்செழு சைவப்பிரகாசா வித்தியாலயம், மாணவர் இடைவிலகல்

**ஆய்வின் அறிமுகம்**

கடந்த சில தசாப்தங்களாக உலக நாடுகளில் கல்வி வசதிகள் நன்கு விரிவுபடுத்தப்பட்டு சகலருக்கும் கல்வி எனும் நோக்கை அடையும் பொருட்டு கல்விக்கான பௌதீக மற்றும் மனிதவளத் தேவைகளும் அதிகரிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு நாடும் கல்விக்காகப் பெருந்தொகையான நிதியை ஒதுக்கி வருகின்ற அதே வேளை கல்வியில் அனைவருக்கும் சம வாய்ப்பினை ஏற்படுத்த முயற்சித்தும் வருகின்றன.

முறைசார் கல்வியில் அரசானது இவ்வாய்ப்பினை வழங்கியுள்ள போதிலும் அதனை அனைத்து மாணவர்களும் முறையாகப் பயன்படுத்திக் கொள்கிறார்களா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இவ்வாறு கல்வியை இடைநடுவில் விட்டு விலகிச் செல்வது கல்வியில் ஒரு வீண்விரயமாகவே கணிக்கப்படுகிறது.

இந்தப் பின்னணியில் ஒரு சமுகத்தின் அறிவு வளர்ச்சிக்கு பாடசாலைகளே பெரிதும் நிலைக்கலன்களாக விளங்குகின்றன. அவற்றின் குறிக்கோள்களை அடைய மாணவர் இடைவிலகலானது நீக்கப்பட்டு பாடசாலைக்கு ஒழுங்காக வருதல் அவசியமாகிறது.

எமது நாட்டின் கட்டாயக்கல்விப் பருவமாக தற்போது 5 - 16 வயது வரையான காலப்பகுதி காணப்படுகிறது. அக்காலத்தில் பல காரணங்களால் மாணவர் தமது கற்றலில் இருந்து விலகிவிடுகின்றனர். இன்று கல்வியானது பொருளாதாரப்பண்டமாக மாறிவரும் நிலையில் அறிவுக்கு இன்று முதலிடமில்லை. எமது நாட்டின் பல பின்னடைவுகளான நாட்டு யுத்தம், இடப்பெயர்வு, வறுமை, இயற்கை அனர்த்தங்கள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டு மீளமுடியாத சந்தர்ப்பத்தில் கல்வியில் இடைவிலகல் ஏற்பட்டுள்ள பின்னடைவான பல பிரதேசங்களும் உள்ளன.

இவ்வாறான ஒரு பாடசாலையாகவே யா/ அச்செழு சைவப்பிரகாசா வித்தியாலயமும் அமைந்துள்ளது. இம்மாணவர்களின் கல்வி தொடர்வதிலுள்ள பிரச்சினைகளைக் கண்டறிந்து இயலுமான உதவிகளைப் பெற்றுக்கொடுத்து இடைவிலகலைக் குறைத்து பாடசாலை வளர்ச்சி ஊடாக சமுதாய வளர்ச்சியையும் ஏற்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.


கடந்த 2010 தொடக்கம் 2014 வரையிலான 5 ஆண்டுகளில் 30 மாணவர்கள் இப்பாடசாலையில் இடைவிலகி உள்ளனர். அத்துடன் இவ்வருடம் (2015) தை மாதம் தொடக்கம் ஆனி மாதம் வரையிலான அரையாண்டுப்பகுதியிலே 8 மாணவர்கள் இடைவிலகி உள்ளனர்.

**அட்டவணை : 01 இடைவிலகிய மாணவர் விபரம் பால்நிலை ரீதியாக**

| ஆண்டு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 2015 (தை-ஆனி) | 03 | 05 | 08 |
| 2014 | 05 | 05 | 10 |
| 2013 | 04 | 01 | 05 |
| 2012 | 00 | 03 | 03 |
| 2011 | 03 | 02 | 05 |
| 2010 | 03 | 04 | 07 |
| மொத்தம் | 17 | 16 | 38 |

**(மூலம் - பாடசாலை அறிக்கை : 2015)**

வரைவு : 01




**இலக்கிய மீளாய்வு**

இடைவிலகல் என்பது கட்டாயக்கல்விக்காலம் எனக்கருதப்படும் பிள்ளையின் 6 - 14 வயது வரையுள்ள காலத்தில் அடிப்படைக்கல்வியை நிறைவுசெய்து பாடசாலையை விட்டு விலகுதல் ஆகும். (தனபாலன் மற்றும் அன்ரனி தவச்செல்வம், 2013)

ஆரம்ப அல்லது இரண்டாந்தரப்பாடசாலையில் தொடர்ச்சியான தவணையில் அங்கத்தவராக இருந்து ஏதோவொரு காரணத்துக்காக கல்வியை இடைநிறுத்துபவர். (Rafihu, 2013) 5 - 14 வயது வரையுள்ள பாடசாலைக்காலத்தில் மாணவர்கள் கல்வியில் பங்குபற்றாமையைக் குறிக்கும். (அனைவருக்கும் கல்வி - நடுத்தசாப்த கணிப்பீட்டறிக்கை, கல்வியமைச்சு, 2008)

ஒரு குறிப்பிட்ட மட்டத்தில் கல்விகற்க பாடசாலைக்குச் சேரும் மாணவர்களும், அதன் பிந்திய மட்டத்தில் கல்வியை நிறைவுசெய்பவர்களின் தொகையையும் ஒப்பிடும் போது இடைவிலகலை அறிய முடியும். (Rafihu, 2013) ஒரு மாணவன் 3 மாதங்களுக்கு தொடர்ந்து சமுகந்தராவிட்டால் அம்மாணவன் பெயர் வகுப்பின் தினவரவு இடாப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது.


மாணவர் இடைவிலகலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக மாணவர், வீடு, பாடசாலை, சமுகம் தொடர்பான காரணிகள் என வகுக்கப்பட்டுள்ளன. (Rafihu, 2013) அத்துடன் மாணவர் இடைவிலகலுக்கான பொதுவான காரணங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. (தனபாலன் மற்றும் அன்ரனி தவச்செல்வம், 2013), (அனைவருக்கும் கல்வி நடுத்தசாப்த கணிப்பீட்டறிக்கை, 2008, கல்வியமைச்சு. வடமாகாணம்), (மாலினி முரலீதரன், 2006) அத்துடன் மாணவர் இடைவிலகலைக் கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனைகளும் மற்றும் மாணவர் வரவைத்தூண்டும் நடவடிக்கைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. (அனைவருக்கும் கல்வி நடுத்தசாப்த கணிப்பீட்டறிக்கை (2008,) கல்வியமைச்சு, வடமாகாணம்), (மாலினி முரலீதரன்,2006)

யுத்தகால இடைவிலகல் பற்றியும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகள், உத்திகள் என்பனவும் முன்வைக்கப்பட்டுள்ளன. (அனைவருக்கும் கல்வி - நடுத்தசாப்த கணிப்பீட்டறிக்கை, கல்வியமைச்சு, 2008). (வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு, 2014) இலங்கையின் பெண்கல்வி வாய்ப்புக்கள் என்பது அவர்களைக் கற்றலுக்கு அனுமதித்தலோடு தொடர்புடையதாகக் கூறப்பட்டுள்ளது. (Center for women's Research &Srilanka Association for the Advancement of education Colombo, 2014)

**ஆய்வுமுறையியல்**

இவ் ஆய்வு ஓர் அளவை சார் ஆய்வாக அமைகிறது. யாழ்மாவட்டத்தில் கோப்பாய்க் கோட்டத்தில் அச்செழு கிராமத்தில் அமைந்துள்ள யாழ். அச்செழு சைவப்பிரகாசா வித்தியாலயத்தில் மாணவர் இடைவிலகலை அறிவதற்காக கடந்த ஆறு வருடகால தகவல்களை ஆண், பெண் அடிப்படையில் சேகரித்து அவர்களுக்கு வினாக்கொத்து வழங்கியும் நேரடியாக உரையாடலை மேற்கொண்டும் தகவல்கள் சேகரிக்கப்பட்டது. அத்துடன் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் இடைவிலகிய மாணவர்களின் பெற்றோர்களிடமும் வினாக்கொத்து வழங்கியும், நேர்காணல் மூலமும் சேகரித்த தகவல்களை அடிப்படையாக கொண்டு இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பாடசாலையில் மாணவர் இடைவிலகல் என்ற பிரச்சினையை இனம் கண்டு அதற்கான காரணங்களும் அறியப்பட்டது. இது பாடசாலை மாணவர் தினவரவு இடாப்பு மற்றும் ஆவணங்கள் மூலம் இனம் காணப்பட்டு அதற்கான காரணங்களை அறியும் பொருட்டு பின்வரும் தரப்பினர்களிடம் வினாக்கொத்து வழங்கியும், நேர்காணலை மேற்கொண்டும், உரையாடியும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன

**ஆய்வின் கட்டமைப்பு**




இவ்வாறான குறைபாடுகளைக் கண்டறிந்தும் அவற்றை குறைத்து அல்லது நீக்கி மாணவர்களின் பாடசாலை இடைவிலகலை தடுத்தல் என்பதே இவ் ஆய்வின் அடிப்படை நோக்கமாக அமைகிறது.

**ஆய்வுக்குடித்தொகையும் மாதிரியும்.**

இடைவிலகிய மாணவர் 15பேர், இடைவிலகிய மாணவர்களின் பெற்றோர் 15பேர் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் 15பேர் ஆகியோர் ஆய்வுக்குடித்தொகையாக தெரிவுசெய்யப்பட்டனர்.

**தரவு சேகரிப்பு முறைகள்.**

தரவுகளானது இடைவிலகிய மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் ஆகியோரிடம் வினாக்கொத்துக்கள் வழங்கியும், நேர்காணல் மூலமும், உரையாடல் மூலமும் மற்றும் அவதானிப்புகள் ஊடாகவும் சேகரிக்கப்பட்டது.

**தரவுப்பகுப்பாய்வு.**

இவ்வாறாக இப்பாடசாலை மாணவர் இடைவிலகலுக்கான காரணங்கள் கண்டறியப்பட்டு அவற்றை அட்டவணைகள், சலாகைவரைபு, வட்டவரைபு மற்றும் புள்ளிவிபரப்பகுப்பாய்வு முறையான கை- வர்க்க பொருண்மைச்சோதனை மற்றும் "SWOT" ஆய்வு என்பவற்றின் மூலம் பகுப்பாய்வு செய்து இடைவிலகலைக் குறைக்கும் முகமாக ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**ஆய்வு முடிவுகள்**

இடைவிலகியமாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரிடம் வினாக்கொத்து, உரையாடல், நேர்காணல் மூலம் பெற்ற தரவுகளையும் மற்றும் பாடசாலையில் அவதானிப்பின் மூலம் பெறப்பட்ட தரவுகளையும் பகுப்பாய்வு செய்ததன் அடிப்படையில் பின்வரும் முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

- இடைவிலகிய மாணவர்களின் ஒழுங்கற்ற பாடசாலை வரவு பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் இடைவிலகிய மாணவர்களின் பெற்றோரின் அபிப்பிராயப் படி இடைவிலகிய மாணவர்களின் பாடசாலை வரவானது மிகக்குறைவாகவும் (66.6%), ஓரளவானதாகவும் (60.0%) காணப்படுவதாகக் கூறியுள்ளனர்.

  இதன் மூலம் ஒழுங்கற்ற பாடசாலைவரவு மாணவர் இடைவிலகலுக்கு காரணமாக அமைந்துள்ளது.

- பாடசாலை நாட்களில் தொழிலுக்குச் செல்லுதல்

  பாடசாலை நாட்களில் தொழிலுக்குச் செல்வதாக இடைவிலகிய மாணவர்களும் (53.4%), அவர்களது பெற்றோரும் (46.6%) கூறியுள்ளனர். பொருளாதார கஸ்டம், குடும்பவறுமை, ஒற்றைநிலைப்பெற்றோர் போன்ற காரணங்களால் தொழிலுக்குச் செல்வதால் கல்வியைத் தொடரமுடியாது இடைவிலகலுக்கு காரணமாக அமைந்துள்ளது.

- கற்பதற்கு உகந்த வீட்டுச்சூழல் இன்மை

  கற்பதற்கு உகந்த வீட்டுச்சூழல் இல்லை என பெற்றோரும்(40.0%), இடைவிலகிய மாணவர்களும் (53.6%) கூறியுள்ளனர். இதனாலும் பாடசாலைக்கல்வியிலிருந்து மாணவர் இடைவிலகி உள்ளனர்.

- கற்றல் உபகரணங்கள் உரிய நேரத்தில் கிடைக்காமை

  கற்றல் உபகரணங்களை உரிய நேரத்தில் வாங்கிக்கொடுக்க முடிவதில்லை என பெற்றோரும் (33.5%), கற்றல் உபகரணங்கள் உரிய நேரத்தில் கிடைப்பதில்லை என இடைவிலகிய மாணவரும் (66.6%) கூறியுள்ளனர். எனவே இவையும் இடைவிலகலுக்குக் காரணமாக அமைந்துள்ளன.

- மாணவர்கள், ஆசிரியர்களுடனான இடைவினை உறவு குறைவு
இடைவிலகிய மாணவர்களின் பாடசாலையில் ஆசிரியர் இடைவினை உறவு (86.7%, 71.2%), மாணவர்களுடனான இடைவினை உறவு (66.6%, 60.0%) நெருக்கமாக அமையாமையும் அவர்களிடையேயான புரிந்துணர்வு குறைவாக உள்ளமையும் மாணவர் இடைவிலகளுக்குக் காரணமாக அமைந்துள்ளது.

- கல்வி நாட்டமும், இணைபாடவிதான செயற்பாட்டில் ஈடுபாடும் குறைவு
ஆசிரியர்களினதும் இடைவிலகிய மாணவர்களினதும் கருத்துப்படி மாண்வர்களின் கல்வி நாட்டமின்மையும் (73.3%, 45.6%), இணைபாடவிதான செயற்பாடுகளில் ஈடுபாடு இன்மையும் (66.6%, 60.0%) இடைவிலகளுக்குக் காரணமாக அமைந்துள்ளது.
இதனால் கட்டாயக்கல்வியின் அவசியத்தை மாணவர்களுக்கு விளங்கவைக்க வேண்டிய தேவை பாடசாலைச் சமூகத்திற்குக் காணப்படுகிறது.

- குடும்பச்சூழல்
இடைவிலகிய மாணவர்களின் குடும்பச்சூழல் (33.4%), பெற்றோர் ஊக்கமின்மை (45.6%), பெற்றோருக்கிடையேயான சண்டை (33.4%) போன்ற காரணங்களாலும் மாணவர்களுக்கு தாழ்வு மனப்பாங்கை ஏற்படுத்தி பாடசாலை இடைவிலகலுக்குக் காரணங்களாக அமைந்துள்ளன.

- பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்கான செயற்பாடுகளில் ஈடுபடாமை
அதாவது பெற்றோர், ஆசிரியர் சந்திப்புக்குச் செல்லாமை (60.0%), பிள்ளைகளின் கொப்பி, தேர்ச்சி அறிக்கைகளைப் பார்வையிடாமை (66.7%), பரீட்சைப்புள்ளிகள் பற்றி ஆசிரியருடன் கதைக்காமை (60.0%), பாடசாலை செல்லாத நாட்களில் காரணம் கேட்காமை (46.6%) போன்றவையும் மாணவர் இடைவிலகலுக்குக் காரணமாக அமைந்துள்ளன.

- பெண்பிள்ளைகள் உயர்கல்வி கற்பதை விரும்பாமை
பெண்பிள்ளைகளுக்கு அடிப்படை ஆரம்பக்கல்வி மட்டுமே போதுமானது என்ற பெற்றோரினதும் சமூகத்தினதும் அபிப்பிராயங்களும் (66.7%) இடைவிலகலுக்குக் காரணமாக அமைந்துள்ளது.

- கட்டாயக்கல்வி பற்றிய பெற்றோரின் அறிவின்மை
மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்பி கல்வி புகட்ட வேண்டும் என்ற அறிவின்மையால் (66.7%) இடைவிலகல் ஏற்பட்டுள்ளது.

- மாணவர்கள் கொடுத்துவிடும் வீட்டுவேலைகள் செய்யாமையும், பரீட்சைப்புள்ளிகளில் திருப்தியின்மையும்
மாணவர்கள் கொடுத்துவிடும் வீட்டுவேலைகள் செய்யாமையும் (86.7%), பரீட்சைப்புள்ளி களில் திருப்தியின்மையும் (73.3%) மாணவர்களின் கல்வி மீதான நாட்டத்தைக் குறை வடையச் செய்து மாணவர் இடைவிலகலுக்குக் காரணமாக அமைகிறது.

- பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் ஊக்கமின்மை

  பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் ஊக்கமின்மை (80.0%), கூட்டங்களில் சமுகமளிக் காமை (80.0%), பாடசாலைக் கட்டணங்களைச் சரியாகச் செலுத்தாமை (46.6%) போன்ற காரணங்களால் ஏற்படும் தாழ்வுச்சிக்கலும் மாணவர் இடைவிலகலுக்குக் காரணமாக அமைந்துள்ளன.

**கை : வர்க்கப் பொருண்மைச் சோதனை முடிவு**

நோக்கப்பட்ட, எதிர்பார்க்கப்பட்ட மாணவர் இடைவிலகலுக்கான காரணங்களுக்கு இடையில் செய்யப்பட்ட கை- வர்க்கப் பொருண்மைச் சோதனை மூலம் பெறப்பட்ட 0.01% மட்டத்தில் பொருண்மையான வேறுபாடு உண்டு என்ற முடிவுகளின் படியும் மாணவர் இடைவிலகலுக்கான காரணங்களை உறுதிப்படுத்த முடிகிறது.

**இப்பாடசாலை மாணவர் இடைவிலகலைத் தடுப்பதற்கான, குறைப்பதற்கான விதப்புரைகள்**

- ஒவ்வொரு பிரிவுகளுக்கும் ஏற்ப பகுதித் தலைவர்களை நியமித்து அவ்வகுப்புகளுக்குரிய பொறுப்புக்களை அவர்களிடமும் பங்கிட்டுக் கொடுத்தல்.
- மேற்குறிப்பிட்ட பிரிவுகளுக்கு ஏற்ப முதல்நிலை, மத்தியநிலை, மேல்நிலை மாணவத் தலைவர்களையும் தெரிந்து அவர்களுக்கான பதவிப்பிரமான விழாவை ஒழுங்குபடுத்தி அவர்களின் கூட்டு முயற்சியினூடாகவும் மாணவர்களை நெறிப்படுத்துதல்
- ஒவ்வொருவருடமும் கொண்டாடப்படும் பரிசளிப்பு விழாவானது அனைத்து மாணவர் களையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.
- சமகால இடைவெளியில் பெற்றோருக்கு கலந்துரையாடல் என்ற பெயரில் கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல். அங்கு அவர்களின் குறைகளைச் சுட்டிக் காட்டுவதை விடுத்து தம் பிள்ளைகள் மீதான கல்விக்கான அக்கறையையும், நாட்டத்தையும் ஏற்படுத்தும் வாய்ப்பை அதிகரிக்கலாம். இதன் மூலம் மாணவரது ஒழுங்கற்ற வரவு மற்றும் இடைவிலகலைத் தடுக்கலாம்.
- மாணவர்களின் பாடசாலை வரவு ஒழுங்கு, சுத்தம், ஒழுக்கம் என்பவற்றை அவதானித்து அதற்கான சிறப்புப் பரிசில்களை ஒவ்வொரு தவணை முடிவிலும் வழங்குவதனூடாக இச்செயற்பாடுகளை நேர்த்தியாக்குவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும்.
- இப்பாடசாலை மாணவர்கள் தமது கிராமம் பற்றிய அறிவை மட்டுமே கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். சுருங்கக்கூறின் வெளியுலகு தெரியாத அப்பாவி நல் மாணவர்களாகவே இருக்கின்றனர். பல்வேறு வழிகளிலும் வளர்ச்சியும் விருத்தியும் அடைந்து வரும் உலகிலே மாணவர்களும் அதற்குரிய தேர்ச்சிகளை அடைவதற்குரிய வகையில் அவர்களுக்கான கல்விச்சுற்றுலாக்களை வருடாவருடம் ஒழுங்கமைப்பதனூடாக அவர்களின் திறன்களை மேலும் வளர்க்க முடியும். அத்துடன் கல்வி பற்றிய ஊக்கம், ஆர்வம் என்பவற்றை ஏற்படுத்துவதனூடாக பாடசாலை இடைவிலகலைக் குறைக்கலாம்.
- இப்பாடசாலை மாணவர்கள் உதைப்பந்து மற்றும் விளையாட்டுத் துறைகளில் கூடிய ஆர்வமும் ஊக்கமும் உடையவர்களாக இருப்பதால் அத்துறை சார்ந்த ஊக்குவிப்புக்களை

வழங்கி அதில் பல வெற்றி வாய்ப்புக்களை ஏற்படுத்துவதனூடாகவும் மாணவர்களின் பாடசாலை வரவைத்தூண்டி அவர்களின் இடைவிலகலைத் தவிர்க்கலாம். இதற்காக சிறந்த மைதான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

- பாடசாலையில் உள்ள நூலகத்தில் வாசிப்பதற்கு மிகவும் கவர்ச்சிகரமான நூல்களை இட்டு மாணவர்களுக்கு வாசிப்பில் சிறந்த ஆர்வத்தை ஏற்படுத்துவதனூடாக கல்வி நாட்டத்தை ஏற்படுத்தி மாணவர் இடைவிலகலைக் குறைக்கலாம்.
- இப்பாடசாலையில் உள்ள கணனி ஆய்வுகூடத்தைப் பயன்படுத்தி அனைத்து மாணவர்களுக்கும் ஒவ்வொரு பாடவேலை ஊடாக கணனி அறிவை ஏற்படத்துவதால் ஆர்வமுடன் மாணவர்கள் தற்கால உலகிற்கு ஏற்ற வகையில் தமது கல்வி அறிவை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினூடாக பாடசாலை இடைவிலகலைக் குறைக்க முடியும்.
- கடந்த வருடங்களில் சிறுநாடகம், குழுப்பாடல்கள், தமிழ், சமயம், விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களில் வினாடி வினாப்போட்டிகள், பேச்சு போன்ற இணைபாடவிதான செயற்பாடுகளில் பங்கு பற்றி பல இடங்களையும் பெற்றுள்ளனர். இவ்வாறான செயற்பாடுகளில் அதிக மாணவர்களை ஈடுபடுத்தல் மற்றும் பாடசாலை மட்டங்களிலும் போட்டிகளை நடாத்தி பரிசில்கள் வழங்குதல் போன்றவற்றினூடாக கலை ஆர்வத்தைத் தூண்டுவதனூடாக இடைவிலகலைக் குறைக்கலாம்.
- இம்மாணவர்களின் பெரும் நெருக்கீடாகக் காணப்படும் வறுமை மற்றும் பொருளாதாரப் பின்னடைவுகளை களைந்து அதற்கான வசதிகளை ஏற்படுத்துவதன் மூலமும் இவர்களின் இடைவிலகலைத்தவிர்க்கலாம்.
- இப்பாடசாலை மாணவரது அடிப்படைத்தேவைகளை (உணவு, சீருடை) சிறந்த முறையில் நிவர்த்தி செய்யக்கூடிய செயற்திட்டங்களை நல்ல முறையில் வடிவமைப்பதனூடாக மாணவரது கல்வி ஆர்வத்தை அதிகரித்து இடை விலகலைக் குறைக்கலாம்.
- இடைவிலகும் மாணவரது பிரச்சினைகளை வகைப்படுத்தி அதற்கேற்ப சிறந்த வழிகாட்டல் ஆலோசனை சேவையை குறித்த காலத்திற்கு ஒரு முறை நடத்துவதன் மூலமும் மாணவர் இடைவிலகலைக் குறைக்க முடியும்.
- அனைத்து மாணவர்களுக்குமே சிறந்த வழிகாட்டல் தேவைப்படுவதால் இப்பாடசாலை ஆசிரியர்கள் அனைவருக்குமே சிறந்த வழிகாட்டல் ஆலோசனை பயிற்சியை வழங்குவதனூடாக ஒவ்வொரு வகுப்பு ஆசிரியர்களும் தமது வகுப்பு மாணவர்களுக்கு தேவையான விதத்தில் வழிகாட்டல் ஆலோசனையை வழங்குவதன் மூலம் மாணவர் இடைவிலகலைத் தடுக்க முடியும்.
- கட்டாயக்கல்வியின் அவசியம், உலகமயமாதலின் விளைவுகள் என்பவற்றை மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் உணர்த்துதல். உலகம் தழுவிய நுகர்ச்சிப்பண்டமாக கல்வி மாற்றப்பட்டு வருகின்றது என கல்வியியலாளர்கள் கூறுகின்றனர். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கல்வியைப் பெறுவதில் அனைவருக்கும் சமஉரிமை, சரிநிகர் சமத்துவம் வழங்க வேண்டியது அவசியமே. இதனாலேயே கல்வியை ஜனநாயகப்படுத்தல் என்ற விடயமும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

**முடிவுரை**

அந்த வகையில் அனைவருக்கும் கல்வியைக் கிடைக்கச் செய்வதில் அனைத்துத் தரப்பினரும் சரியான முறையில் செயற்பட்டு தாழ்த்தப்பட்ட சமுகங்களுக்கும் இக்கல்வியைக் கிடைக்கச் செய்வதனூடாக இப்பாடசாலை மாணவர் இடைவிலகலைக் குறைக்க வழியை ஏற்படுத்த முடியும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

**உசாத்துணைகள்**


- தனபாலன் ,பா., அன்ரனி தவச்செல்வம், சு. (2013) பாடசாலை இடைவிலகலும் சிறுவர் துஷ்பிரயோகமும், இவற்றுக்கான புனர்வாழ்வு பாதுகாப்பு ஏற்பாடுகளும். புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கான சேவை முன் பயிற்சி நெறி, மாகாணக்கல்வித் திணைக்களம் - வடமாகாணம்.
- Rafihu M.H.M. (2013) மாணவர் இடைவிலகலும் அதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளும், பக்கம் 28, அகவிழி – பெப்ரவரி, விழுது Publication, Colombo.
- பங்குபற்றாமையும் இடைவிலகலும், அனைவருக்கும் கல்வி நடுதசாப்த கணிப்பீட்டறிக்கை (2008), இலங்கை கல்வியமைச்சு வடமாகாணம், பக்கம் 88.
- வடக்கின் கல்வி முறைமை பற்றிய மீளாய்வு, (2014), வடமாகாணகல்வி அமைச்சு, பக்கம். 130.
- வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு (2014) பக்கம். 191.
- Center for women's research (CENWOR) & Sri Lanka Association for the Advancement of Education Colombo, (2014) Selected Puplication of Professor Swarana Jayweera.
- மாலினி முரளீதரன், (2006), பாடசாலையில் மாணவர் வரவு குறைவாக இருத்தல், கிராமிய ரீதியான ஒரு பார்வை, அகவிழி – டிசம்பர் (2006), விழுது Puplication, Colombo, பக்கம்.13.
- பாடசாலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல் வேலைத்திட்டங்கள், கல்வி அமைச்சின் சுற்றறிக்கை இல. 6 (2013)

# Educationalist Research Journal

**Chief Editor**

Mr. P.Rajeswaran, *Lecturer, Jaffna National College of Education, Kopay, Jaffna.*

**Review & Guidance**

Dr. (Mrs.) J. Rasanayagam, *Senior Lecturer, Department of Education, University of Jaffna.*
Prof. M.Sinnathamby, *Former Head, Department of Education, University of Jaffna.*

**Advisory Board**

Prof. Saba Jeyarasa, *Former Head, Department of Education, University of Jaffna.*
Pof. S. Sandarasegaram, *Former Dean, Faculty of Education, University of Colombo.*
Prof.M.Karunanithy, *Former Director, Department of Social science Edu, Faculty of Edu. University of Colombo.*
Prof. M. Selvarajah, *Former Head, Department of Education, Eastern University.*
Prof. K. Sinnathamby, *Former Head, Department of Education, University of Jaffna.*
Prof.T. Velnampy, *Dean, Faculty of Management Studies & commerce, University of Jaffna.*
Dr.(Mrs.) A. Sathiaseelan, *Head, Department of Education, University of Jaffna.*
Prof. G.Mikunthan, *Dean, Faculty of Graduate Studies, University of Jaffna.*
Prof. P. Pushparatnam, *Department of History, University of Jaffna.*
Dr. T. Kalamany, *Senior Lecturer, Department of Education, University of Jaffna.*
Dr. T. Kamalanathan, *Former President, Jaffna National College of Education.*
Dr. K. T. Kaneshalingam, *Senior Lecturer, Department of Political Science, University of Jaffna.*
Dr. S. Arulmoly, *Head, Department of Education & Child Care, Eastern University.*
Mr. S. Amirthalingam, *President, Jaffna National college of Education, Jaffna.*
Dr. F.M. Nawatheen, *Senior Lecturer, Faculty of Education, Open University, Sri Lanka.*
Dr. T.Mugunthan, *Senior Lecturer, Faculty of Education, Open University, Sri Lanka.*
Mr. S.R.Sathiyenthirampillai, *Vice President, Jaffna National College of Education.*
Dr. B. Thanabalan, *Vice President, Jaffna National College of Education.*
Mr. Lenin Mathivanam, *Deputy Commissioner, Department of Publication, Ministry of Education.*
Mrs. I.Selvarani, *Lecturer, National Institute of Education, Sri Lanka.*
Mr. S.Athirathan, *Lecturer, Department of Social Science Edu. University of Colombo.*
Mr. S. Paramanantham, *Vice president, Vavuniya National College of Education, Vavuniya.*
Mrs. S. Sivapatham, *Vice President, Jaffna National College of Education, Jaffna.*
Miss. M. Rajini, *Lecturer, Faculty of Education, Open University, Sri Lanka.*
Mr. S. Navaneethakrishnan, *Senior Assistant Librarian, University of Jaffna.*

**Educationalist Research Journal (ERJ) 2016, October**

Copy Right : To Chief Editor
Published by : Educational Publication Centre,
Jaffna, Sri Lanka.
Issn : 1800 - 1378
Price : 500/=
E-mail : educationalisteditor@gmail.com
T.P : 0776184437

All rights Reserved, No part of this publication may be reproduced, stored, retrieved or transmitted, in any form or by any means, without the prior permission of the copyright owner. All data, views, opinions and Informations published in this publication are the sole responsibilities of the authours.

**Contact** : Mr. P.Rajeswarn, Chief Editor, Educationalist Research Journal,
55/3, Play Ground Road, Kalviyankadu, Jaffna, Sri Lanka.
T.P : 0776184437, e-mail : educationalisteditor@gmail.com